**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
- - - - -

# IN THE COURT OF THE SESSIONS JUDGE, MAHALIR NEETHIMANDRAM, MADURAI.

| | | |
|---|---|---|
| **Case No.** | : | **SC NO. 83 / 2018** |
| **Deposition of witness for** | : | **PW : 8** |
| **Name** | : | **திருமதி. ருக்குமணி** |
| **Father's / Husband's Name** | : | |
| **Village** | : | |
| **Taluk** | : | |
| **Caste** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **16.11.2023**

எதிரி2 ஆஜர். எதிரிகள் 1,3,4 ஆஜரில்லை. பிரிவு 317 குவிமுச கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை :**

நான் மதுரை, ஜெய்கிந்துபுரத்தில் குடியிருந்து வருகிறேன். எனக்கு விஜயலெட்சுமி, கார்த்திக், விக்னேஷ்குமார் ஆகிய மூன்று குழந்தைகள் உள்ளார்கள். எனது கணவர் இறந்துவிட்டார். என் மகள் 12ம் வகுப்பு படித்துள்ளார். எங்கள் பகுதியில் உள்ள phone கம்பெனியில் வேலை பார்த்தாள். சுமார் 5 வருடங்களுக்கு முன்பு, என் மகள் விஜயலெட்சுமி வேலைக்குச் சென்றவர் காணவில்லை. என் மகள் பொதுவாக காலை சுமார் 08.30 மணிக்கும் போவார், 09.00 மணிக்கும் வேலைக்குப் போவார். என் அக்கா மகன் அழகர்சாமி என் மகளைத் தேடி எங்கள் வீட்டிற்கு வந்து என்னிடம் பாப்பா எங்கே என்று கேட்டார். நான் அவரிடம் வேலைக்குப் போயிருப்பதாகச் சொன்னேன். அதற்கு அவர், நீ வேலைக்குப் போயிருப்பதாகச் சொல்ற, ஆனா அவ ஆருன் உடன் பசுமலை கிட்ட போயிருக்கா என்று சொன்னார். அதற்குப் பிறகு என் மகளை ஆரூன்

வீட்டிலும், என் மகளின் தோழி வீட்டிலும் நானும், என் அக்கா மகனும் தேடிப் பார்த்தோம். அங்கு அவளைக் காணோம். ஆருனும், என் மகளின் தோழியும் அவர்கள் வீட்டில் இல்லை. அதன் பிறகு மறுநாள் ஜெய்கிந்துபுரம் போலிஸ் ஸ்டேசனுக்குச் சென்று நானும் என் மகனும் complaint கொடுத்தோம். வேலைக்குப் போன என் மகளைக் காணோம் என்று புகார் கொடுத்தோம். அதன் பிறகு 4 நாட்கள் கழித்து பேரையூரில் பாடி இருக்கு என்று சொல்லி என்னை அங்கு கூட்டிச் சென்றார்கள். என் மகள் இறந்துபோனதைக் காட்டினார்கள். என் மகள் எப்படி இருந்தாள் என்றால் என்னால் சொல்ல முடியவில்லை என்று சாட்சி அழுது கொண்டே சொல்கிறார். எனக்கு மயக்கம் வந்துவிட்டது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>குறுக்கு விசாரணை (எதிரிகள் தரப்பில்) :</u>

என் மகள் விஜயலெட்சுமி செல்போன் வைத்துள்ளார். எந்த இடத்தில் என் மகள் வேலை பார்த்தார் என்றால் ஜெய்கிந்துபுரத்தில் தான் வேலை பார்த்தாள். போலிசார் விசாரணையின் போது என் மகள் ஜெய்கிந்துபுரத்தில் வேலை பார்த்து வந்தார் என்ற விபரத்தைச் சொன்னேன். பசுமலைக்கும் அழகப்பா நகர் ரயில்வே கேட்டிற்கும் இடைய எவ்வளவு தூரம் இருக்கும் என்று எனக்குத் தெரியாது. ஜெய்கிந்துபுரம் காவல்நிலையத்தில், என் மகள் காணாமல் போனது சம்பந்தமாக நான் அளித்த புகாரில் 1 வது எதிரி முகமது ஆரூன் உடன் என் மகள் சென்ற விபரத்தைச் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அந்த புகார் மனுவில் நான் அவ்வாறு சொல்லவில்லை என்றும் தற்போது வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. என் மகள் பிரேதம் இருப்பதாக ஜெய்கிந்துபுரம் போலிசார் சொன்னார்கள். எத்தனைக்கு சொன்னார்கள் என்றும் எத்தனை மணிக்கு பிரேதம் இருந்த இடத்திற்கு சென்றேன் என்றும் ஞாபகம் இல்லை. பிரேதம் இருந்த இடத்திற்கு ஜெய்கிந்துபுரம் போலிசார் தான் என்னை கூட்டிச்சென்றார்கள். பிரேதம் கிடந்த இடத்தில் எவ்வளவு நேரம் இருந்தேன் என்றால் சுமார் 1 மணி நேரம் இருந்திருப்பேன். நான் பிரேதம் இருந்த இடத்திலேயே மயக்கமானதால்

என்னை வேனில் வைத்திருந்தார்கள். வீட்டிற்கு வரும் போது இரவு சுமார் 07.00, 08.00 மணி இருக்கும். நான் வேனில் இருந்தபோது 1 வது எதிரியைப் பார்த்தேனா என்றால் நான் 1 வது எதிரியைப் பார்த்ததே இல்லை. பிரேதம் கிடந்த இடத்தில் வைத்து என்னை வேறு போலிசார் விசாரித்தார்கள். பிரேதத்தைப் பார்த்தவுடன் அது என் பொண்ணுதான் என்று சொல்லி அழுதேனா என்றால் அழுதேன். என் மகளுக்கு ஈமச்சடங்குகள் நான் செய்யவில்லை. என் மகள் பிரேதத்தைப் புதைக்கவும் நான் முயற்சி செய்யவில்லை. போலிசார் சொன்னதன் பேரில் தான் அந்த பிரேதம் என் மகள் என்று எனக்குத் தெரியவந்தது என்றால் சரிதான். நான் சொன்னது போல் சொன்ன தேதியில் சொன்ன விதத்தில் ஜெய்கிந்துபுரம் காவல்நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை என்றும், போலிசார் கேட்டுக் கெண்டதற்கிணங்க உண்மைக்குப் புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம்,மதுரை

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
- - - - -

# IN THE COURT OF THE SESSIONS JUDGE, MAHALIR NEETHIMANDRAM, MADURAI.

| | | |
|---|---|---|
| **Case No.** | : | **SC NO. 83 / 2018** |
| **Deposition of witness for** | : | **PW : 9** |
| **Name** | : | **திரு. கார்த்திக்** |
| **Father's / Husband's Name** | : | |
| **Village** | : | |
| **Taluk** | : | |
| **Caste** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **16.11.2023**

எதிரி2 ஆஜர். எதிரிகள் 1,3,4 ஆஜரில்லை. பிரிவு 317 குவிமுச கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை :**

நான் மதுரை ஜெய்கிந்துபுரத்தில் குடியிருந்து வருகிறேன். அசா8 எனது அம்மா. எனக்கு உடன் பிறந்தவர்கள் 2 பேர். ஒரு அக்காவும் ஒரு தம்பி ஒருவர் உள்ளார்கள். என் அக்கா பெயர் விஜயலெட்சுமி. தற்போது அவர் இறந்துவிட்டார். என் அக்கா விஜயலெட்சுமி 12ம் வகுப்பு படித்துவிட்டு அண்ணாநகரில் உள்ள aircel கம்பெனியில் வேலைபார்த்தார். என் அக்கா காலை 08.00 மணிக்கு வேலைக்குப் போய்விட்டு இரவு 09.00 மணிக்கு வீட்டிற்கு வருவார். 23.09.2016 ம்தேதியன்று காலை 08.00 மணிக்கு வழக்கம்போல என் அக்கா வேலைக்குச் சென்றார். என் பெரியப்பா மகன் அழகர்சாமி எங்கள் வீட்டிற்கு வந்து, விஜயலெட்சுமி எங்கே என்று கேட்டார். நானும் என் அம்மாவும் அவரிடம், என் அக்கா வேலைக்குப் போயிருப்பதாகச் சொன்னோம். அதற்கு அவர், இல்லை, விஜயலெட்சுமி, அழகப்பன்நகர் ரயில்வே கேட் அருகே முகமது ஆரூண் பைக்கில் என்

அக்காவும் என் அக்காவின் friend சுபாஷினி என்பவரும் உடன் செல்வதாகச் சொன்னார். நாங்கள் உடனே ஆரூண் என்பவர் வீட்டிற்குச் சென்று தேடிப் பார்த்தோம். அங்கு ஆரூண் இல்லை. பின்னர் சுபாஷினி வீட்டிற்குச் சென்று தேடிப் பார்த்தோம். சுபாஷினியும் அங்கு இல்லை. இரவு முழுவதும் நாங்கள் தேடிப்பார்த்தோம். என் அக்காவைக் காணவில்லை. அதன் பின் 24.09.2016 ம் தேதியன்று காலையில் ஜெய்கிந்துபுரம் போலிஸ் ஸ்டேசனுக்கு நான், என் அம்மா, சித்தி மகாலெட்சுமி, பெரியப்பா கோபால், அண்ணன் அழகர்சாமி, ஆகியோர் சென்றோம். என் அம்மா புகார் கொடுத்தார். 01.10.2016 ம்தேதியன்று ஜெய்கிந்துபுரம் காவல்நிலையத்தில் இருந்து என் அம்மாவிற்கு போன் செய்து, பேரையூரில் ஒரு dead body உள்ளது என்றும் வந்து அடையாளம் காட்டுங்கள் என்று சொன்னார்கள். அப்போது நான் என் அம்மாவுடன் இருந்தேன். அதன்பிறகு நாங்கள் வேன் பிடித்து பேரையூருக்குச் சென்றோம். அங்கு என் அம்மா dead body ஐப் பாத்தவுடன் மயக்கமாகிவிட்டார். அதனால் என்னை அடையாளம் காண்பிக்கச் சொன்னார்கள். நான் தான், பிரேதமாக இருப்பது என் அக்கா விஜயலெட்சுமி என்று அடையாளம் காண்பித்தேன். என் அக்கா விஜயலெட்சுமி ஆரஞ்சு கலர் சுரிதாரும், காதில் கம்மலும், காலில் கொலுசும் போட்டிருந்தார். அதை வைத்து அந்த பிரேதம் என் அக்கா விஜயலெட்சுமியின் பிரேதம் தான் என்று அடையாளம் காண்பித்தேன். பிரேதம் கிடந்த இடம் பேரையூர் பக்கத்தில் பழையூர் என்ற இடத்தில் இருந்தது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>குறுக்கு விசாரணை (எதிரிகள் தரப்பில்) :</u>**

ஜெய்கிந்துபுரம் காவல்நிலையத்தில் என் அம்மா கொடுத்த புகாரை நான் படித்துப் பார்க்கவில்லை. ஜெய்கிந்துபுரம் போலிசார் என்னை அதன்பிறகு தனித்தனி நாளில் 4,5 முறை விசாரித்தார்கள். வேறு போலிசார் என்னை விசாரிக்கவில்லை. போலிசார் விசாரணையில், ஆருண் வீட்டிற்கும், சுபாஷினி வீட்டிற்கும் என் அக்காவைத் தேடிச் சென்ற விபரத்தைச் சொல்லவில்லை என்றும் தற்போது வழக்கிற்காக சொல்கிறேன் என்றால்

சரியல்ல. எனது அக்கா விஜயலெட்சுமி பயன்படுத்திய செல்போன் தற்போது வரை எங்கள் வீட்டில் இல்லை. ஆனால் என் அக்கா விஜயலெட்சுமி, செல்போன் பயன்படுத்தினார் என்றால் சரிதான். அந்த செல்போன் என்ன ஆனது என்று எனக்குத் தெரியுமா என்றால் தெரியும். பிரேதம் கிடந்த இடத்திற்கு சுமார் 01.00 மணிக்குச் சென்று மாலை சுமார் 06.00 மணி வரை அங்கு இருந்தோம். பிரேதத்தைப் பார்த்தவுடனேயே அது என் அக்கா விஜயலெட்சுமி தான் என்று அடையாளம் கண்டுகொண்டேன் என்றால் சரிதான். அது சம்பந்தமாக அங்கிருந்த அதிகாரிகளிடம் இது என் அக்கா தான் என்று சொன்னேன். அவர்கள் அதை எழுதிக்கொண்டார்கள். பிரேதத்தைப் பார்த்தவுடன் அது அடையாளம் காணமுடியாத நிலையில் இருந்தது என்றும் போலிசார் சொல்லிக்கொடுத்து அந்த பிரேதம் என் அக்கா விஜயலெட்சுமியின் பிரேதம் தான் என்று அடையாளம் காட்டினேன் என்று வழக்கிற்காக பொய்யாகச் சொல்கிறேன் என்றால் சரியல்ல. ஜெய்கிந்துபுரம் காவல்நிலையத்தில் நான் சொன்ன தேதியில் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் என் அக்கா காணாமல் போனது பற்றி புகார் அளிக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. 1 வது எதிரி மற்றும் சுபாஷினி ஆகியோர் வீட்டிற்குச் சென்று என் அக்காவைத் தேடிப் பார்க்கவில்லை என்றும் தற்போது வழக்கிற்காக பொய்யாகச் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம்,மதுரை